



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# அருள் மொழிகள்

வாழ்க்கையில் நாம் விருத்தி செய்ய வேண்டிய முக்கிய குணங்களில் கருணை ஒன்று. இன்பமும் துன்பமும் எல்லாருடைய வாழ்க்கையிலும் மாறி மாறி வருவதால் கஷ்டப்படுபவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம். மற்றவர்களுக்கு உதவ ஒரு ஆர்வம் நமக்குள் ஏற்படுவதற்கு நமக்குள் கருணை இருக்கவேண்டும். பகவானுடைய கருணை எல்லையற்றதாக இருப்பதால் அவர் கருணைக்கடல் என்று வர்ணிக்கப்படுகிறார். லோகஸம்ரக்ஷணத்துக்காக அனேக அவதாரங்களை எடுக்க இந்த கருணைதான் பகவானை தூண்டுகிறது. ஒருவன் கருணையால் மற்றொருவனுக்கு உதவும் பொழுது அதற்கு கைமாறு எதிர்பார்க்கக்கூடாது. அப்பொழுதுதான் அவன் ஸத்புருஷன் என்று அழைக்கத்தக்கவன். கருணையினால்தான் குரு தன் சிஷ்யனுக்கு உபதேசம் செய்கிறார் என்று ஆதிசங்கர பகவத்பாதர் கூறுகிறார். சிஷ்யன் குருவை பக்தியுடன் அணுக வேண்டும். ஏனென்றால் குரு ஒரு கருணைக்கடல். மற்றும் பிரஹ்மஞானிகளில் உத்தமமானவர் என்பது பொருள்.



ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் நற்குணமான கருணையை விருத்தி செய்து நடைமுறையில் கொண்டு வர வேண்டும். மற்றவர்களுக்கு செய்யும் சிறு உதவிக்கும் அதன் புண்ணியம் உண்டு. மற்றவர்களை பற்றி நல்லதை சொல்வதே ஒரு ஸத்காரியம். தனக்கு தீங்கு செய்ய வந்த ஒரு கபாலிகாவுக்கே ஆதிசங்கரர் கருணை காட்டினார். இது உன்னதமான கருணை. குழந்தை பருவத்தில் இருந்தே சிறுவர்களிடம் கருணையை பதிய வைக்கவேண்டும். பள்ளியில் பயிலும் பொழுதும் தங்களுடன் படிக்கிறவர்களுக்கு எவ்வித சிறு உதவியையும் அளிக்க மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். இரண்டு மனிதர்கள் சண்டை போடுவதை நாம் பார்த்தால் அவர்களை சமாதானப்படுத்தி சண்டையை நிறுத்த முயற்சிப்பது நம் கடமை.

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கருணை நிறைந்தவர்களால் தான் இம்முயற்சியில் ஈடுபட முடியும். நல்ல பதவியில் இருப்பவன் தகுதியுடன் தன்னைத் தேடி வந்தவர்களுக்கு நியாயமான உதவிகளை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு நம் வாழ்க்கையில் நிறைய சந்தர்ப்பங்கள் உள்ளன. அவைகளை தவறவிட்டால் வருத்தப்படவேண்டி வரலாம். அது அறிவில்லாமையும்கூட. ஆதலால் எல்லோரும் மற்றவர்களுக்கு தங்களால் முடிந்த உதவியை செய்து பகவதனுக்ரஹத்தை பெறுவார்களாக.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்



“நாம் எந்த சுகத்தை அடைய நினைக்கிறோமோ அது (அந்த சுகம்) இந்த லௌகிகமான விஷயங்களினால் கிடைக்காது. ஆகையால் திரும்பவும் இந்த விஷயங்களில் ஈடுபடுவது வீண்” என்ற எண்ணம் நமக்கு வர வேண்டும். அப்படியென்றால், “எதில் வாஸ்தவமான சுகம் கிடைக்கும்?” என்று கேட்டால், “பகவானுடைய நினைவு மனதில் இருந்தால், மனதில் ஸத்விஷயங்களைப் பற்றி நினைத்தால், அப்போதுதான் வாஸ்தவமான சுகம் நம் அனுபவத்திற்கு வரும்” என்பதே அதற்குப் பதில், எல்லோரும் இதை அனுபவித்துப் பார்க்கலாம். மற்ற எல்லா விஷயங்களையும் மறந்துவிட்டு பகவானுடைய சன்னிதியில் ஒரு பத்து நிமிடங்கள் உட்கார்ந்து வேறு எதையும் சிந்திக்காமல், பகவானுடைய ரூபத்தை மட்டும் சிந்தித்துக் கொண்டிருந்தால் அப்போது மனதிற்கு ஒரு சொல்ல முடியாத இன்பம், ஒரு சொல்ல முடியாத ஆனந்தம் உண்டாகும் என்பதை நாம் நம் அனுபவத்திலேயே பார்க்கலாம்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

आत्मजानमनायासः तितिक्षा धर्मनित्यता ।
वाक्चैव गुप्ता दानंच नैतान्यन्त्येषु भारत ॥९१॥

ஆத்மஜானமனாயாஸ: திதிக்ஷா த$^{4}$ர்மநித்யதா |
வாக்சைவ கு$^{3}$ப்தா தா$^{3}$னஞ்ச நைதான்யந்த்யேஷு பா$^{4}$ரத ||91||

"பாரதனே! ஆத்மஞானம், எந்தச் சூழலிலும் மனம் கலங்காமல் இயல்பாக நிலைத்திருக்கும் அமைதி, இன்ப–துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கும் திதிக்ஷா, தர்மத்தில் எப்போதும் நிலைத்திருத்தல், அடக்கமான மற்றும் காக்கப்பட்ட சொல், தானம் செய்வது ஆகிய இந்த உயர்ந்த நற்குணங்கள் கீழ்மனப்பான்மை உடையவர்களிடம் ஒருபோதும் காணப்படுவதில்லை. இவை உயர்ந்த சிந்தனையும் நல்லொழுக்கமும் கொண்ட சான்றோரின் இயல்பான அடையாளங்களாகும்."

हिंमा बलमलाधूनां राज्ञां दण्डविधिर्बलम् ।
शुश्रूषा तु बले स्त्रीणां क्षमा गुणवतां बलम् ॥९२॥


ஹிம்'மா ப$^{3}$லமலாது$^{4}$னாம்' ராஜ்ஞாம்' த$^{3}$ண்ட$^{3}$விதி$^{4}$ர்ப$^{3}$லம் .
ஶுஶ்ரூஷா து ப$^{3}$லே ஸ்த்ரீணாம்' க்ஷமா கு$^{3}$ணவதாம்' ப$^{3}$லம் ..92..

"பலவீனமானவர்களுக்கு அவர்களுடைய உண்மையான பலம் பணிவாகும். அரசர்களுக்கு அவர்களுடைய பலம் நீதியுடனான தண்டனை வழங்கும் அதிகாரமாகும். பெண்களுக்கு அவர்களுடைய பலம் அன்புடனும் அர்ப்பணிப்புடனும் செய்யும் சேவையாகும். உயர்ந்த குணங்களைக் கொண்ட சான்றோருக்கு அவர்களுடைய மிகப்பெரிய பலம் பொறுமையும் மன்னிக்கும் குணமுமாகும்."


वाक्प्रंयमोहि नृपते सुदुष्करतमो मतः ।
अर्थवश्च विचित्रंच नशक्यं बहुभाषितुम् ॥९३॥

வாக்ப்ரம்'யமோஹி ந்ரு'பதே ஸுது$^{3}$ஷ்கரதமோ மத: .
அர்த$^{2}$வஶ்ச விசித்ரஞ்ச நஶக்யம்' ப$^{3}$ஹுபா$^{4}$ஷிதும் ..93..

"அரசனே! வாக்கை அடக்கி ஆளுவது மிகவும் கடினமான சாதனைகளில் ஒன்றாகும் என்று சான்றோர் கருதுகின்றனர். பொருள் நிறைந்ததாகவும், இனிமையானதாகவும், ஆழ்ந்த கருத்தைக் கொண்டதாகவும், கேட்போருக்கு நன்மை பயப்பதாகவும் பேசுவது எளிதல்ல. அதிகமாகப் பேசுவதால் இத்தகைய சிறந்த பேச்சு அமையாது. எனவே தேவையான அளவில், சிந்தித்து, பொருள் பொதிந்த சொற்களையே பேச வேண்டும்." (தொடரும்....)



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita




ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ மஹாஸந்நிதானம் ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## 13. பக்தியில் பல விதம்



சிலருக்கு பகவானுடன் சிநேக பாவத்துடன் பழக வேண்டும் என்பதில் ருசி இருக்கும். அது எல்லோருக்கும் சாத்தியமா என்றால் அர்ஜுனனுக்கு அது சாத்தியமாகத்தான் இருந்தது. அர்ஜுனனுக்கு விச்வரூப தரிசனத்தைப் பகவான் காண்பித்த பிறகு,

**ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்**
**ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதிர |**

என்றான் அர்ஜுனன். “பகவானே, உன்னை நண்பன் என்று கருதிப் பழகி வந்தேன். அதற்காக என்னை மன்னித்து விடு” என்று கேட்டுக்கொண்டான். ஆனால், பகவான் அர்ஜுனனுக்கு பரமபதத்தையே அருளினான்.

சிலர் தங்களது உடமைகள் மற்றும் தங்களையே பகவானுக்கு அர்ப்பணிப்பதே சிறந்த பக்தி என்று நினைத்து அவ்வாறே செய்வர். பலிச் சக்கரவர்த்தியிடம் வாமன அவதாரத்தில் இருந்த பகவான் தமக்கு மூன்று அடி நிலம் வேண்டும் என்று கேட்டார். அதற்கு ஒப்புக்கொண்டான் பலி. முதல் அடியில் பூமண்டலத்தையே ஆக்ரமித்துக் கொண்டான் பகவான். இரண்டாவது அடியில் ஆகாசமும் சேர்ந்துவிட்டது. மூன்றாவது அடிக்குப் பலி தன்னுடைய சிரஸை தணித்து, "என்னுடைய எல்லாவற்றையும் அர்ப்பணித்து விட்டேன்" என்று கூறிவிட்டான். இதுதான் ஆத்மநிவேதனம் என்பது.

தன்னுடையது என்று எதுவுமில்லை. எல்லாமே இறைவனுடையது என்ற நிலைதான் ஆத்மநிவேதனம் எனப்படும். இவ்வாறு ஒன்பது விதமாக பக்தியானது சாஸ்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. பகவத் கதைகளைக்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கேட்பது, அவன் புகழ் பாடுவது. அவனை எப்போதும் நினைப்பது. அவனது பாதஸேவை செய்வது. பூஜிப்பது. வணங்குவது, தாஸ்ய பாவத்துடன் ஸேவை செய்வது, நட்போடு பழகுவது, இறுதியில் தன்னையே அர்ப்பணிப்பது ஆகிய இவையெல்லாம் பக்தியின் வகைகள். இவற்றில் எந்த விதமான பக்தியை நாம் வளர்த்துக் கொண்டாலும் அது நமக்கு சிரேயஸ்ஸையே தரும். நாம் முன்பே பார்த்தது போல, பக்தியின் ஒவ்வொரு வகைக்கும் எவ்வளவோ உதாரணங்கள் பாகவதம் போன்ற புராணங்களில் இருக்கின்றன.

நமக்கு எந்த விதமான பக்தியும் இல்லை என்றால் அத்தகைய வாழ்க்கை எதற்கும் பயனில்லாத வாழ்க்கை ஆகிவிடும். மனிதப் பிறவி என்பது கிடைப்பதற்கு துர்லபமானது என்று எல்லோருக்கும் தெரியும். நம்முடைய சென்ற பிறவியில் நாம் செய்த எண்ணற்ற புண்ணிய கர்மாக்களின் விளைவாகத்தான் இப்போது நமக்கு மனிதப் பிறவி கிடைத்திருக்கிறது. அப்படியிருக்கையில், இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒருவனுக்கு இருந்தால், பக்தி போன்ற சாதனங்களை ஒருவன் கடைப்பிடித்தல் மிக அவசியமாகும். ஸ்ரீ ஆதிசங்கரர் ஓரிடத்தில்,

**இத: கோன்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்தே ப்ரமாத்யதி |**
**துர்லபம் மானுஷம் தேஹம் ப்ராப்ய தத்ராபி பௌருஷம் ||**

என்கிறார்.

நாம் எத்தனையோ வேண்டாத விஷயமெல்லாம் பேசுகிறோம். நம்முடைய சிரேயஸ் எது என்பதை யோசிக்கிறோமா? பிறவியில் எவ்வாறு கடைத்தேறுவது என்று யோசிக்கிறோமா? நாம் மறுபிறவி எடுக்காமல் இருப்பதற்கு ஏதாவது முயற்சி செய்கிறோமா? நம்முடைய சிரேயஸ்ஸைப் பற்றிச் சிந்திக்காமல் மற்ற விஷயங்களையே யோசிப்பது எவ்வளவு விசித்திரம்! இந்த இடத்தில் எனது பரமகுருநாதர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளைப் பற்றிய சம்பவம் ஒன்று என் நினைவுக்கு வருகிறது. அவரும் ஸதாசிவ பிரஹ்மேந்திராளைப் போலவே மாபெரும் ஜீவன்முக்தர். எப்போதும் அந்தர்முகமாகவே இருந்தார் அவர். ஆத்ம தத்துவத்திலேயே எப்போதும் மூழ்கியிருந்த அவர் வெளி விஷயங்களில் ஈடுபடுவதையே நிறுத்தியிருந்தார். மடத்து அதிகாரி தக்க தருணம் பார்த்து ஒரு நாள் அவரிடம், "நீங்கள் இப்போதெல்லாம் வெளியே வந்து ஜனங்கள் யாரையும் விசாரிப்பதேயில்லை. ஜனங்கள் ஆயிரக்கணக்கில் வந்து தங்களது தரிசனம் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிப் போகிறார்கள். ஆகவே மடத்தின் நலன் கருதி, தாங்கள் இங்கு வரும் ஜனங்களை விசாரிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

(தொடரும் …..)


ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

### 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - மொழிசார் அறிவாற்றல்



ஆசார்யாளின் உபன்யாஸங்கள் (அருளுரைகள்) பற்றிக் கூறினோம். இதே போல் அவர் எழுதிய விளக்கவுரைகளிலும் மொழிசார் அறிவாற்றல் வெளிப்பட்டது என்பதைக் காணலாம். ஆசார்யாளின் விளக்கவுரைகளைப் பற்றி வேறொரு நூலின் பதிப்புரையில் கூறுவது: "... (இந்நூலில் ஆசார்யாள் எழுதிய) எந்த சொற்றொடரும் அனாவசியமாகவோ தவறாகவோ, நிரூபிக்க முடியாதவாறோ, கருத்தாழமின்றியோ அமையவில்லை. ஒவ்வொரு கட்டுரையும் கருத்துச்செறிவுடன் விளங்குகிறது; அவற்றில் காணப்படும் வாதங்கள் கூர்த்தனவாகவும் முடிவாகவும் உள்ளன. சாஸ்திரங்களில் இருக்கும் நுணுக்கமான கருத்துகள் பல இவற்றுள் சற்றும் செறிவு குறையாதவாறு பொதிந்துள்ளன என்பதைப் படிப்பவர் அறியாதவாறு மிக எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. இது ஆசார்யாளின் தனிப்பட்ட நடை என்று சொல்லலாம். ..."

இனி, அறிவாற்றல் என்றால் என்ன என்பதைப் பற்றிப் பேசும் பொழுது ஒரு குறிப்பிட்ட அறிவாற்றலின் வளர்ச்சியை ஒருவர் விஷயத்தில் பார்க்க முடியும் என்று கூறினோம். மொழிசார் அறிவாற்றல் இதற்கு விதிவிலக்கல்ல. சாதாரணமாக, எல்லாக் குழந்தைகளும் இந்த அறிவாற்றலை ஏதேனும் ஒரு விதத்தில் வெளிப்படுத்துகின்றனர் என்று கார்ட்னர் கூறுகிறார். ஆனால் இந்த அறிவாற்றல் வயதிற்கு மிஞ்சிய வகையில் ஒரு குழந்தையின் எழுத்திலோ பேச்சிலோ தெரிந்தால் அக்குழந்தை பிற்காலத்தில் மொழிசார் அறிவாற்றல் உள்ளவராகத் திகழ்வார் என்றும் பல நிகழ்வு ஆய்வுகளின் துணை கொண்டு

கூறுகிறார். இதற்கு உதாரணமாக கார்ட்னர், பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் ஸார்த்ரேயைக் காட்டுகிறார். ஸார்த்ரே ஐந்து வயதிலேயே மிகச் சரளமாகவும், வயதில் பெரியவர்களைப் போல் பேசிக் காட்டியும் மற்றவரை வியப்படையச் செய்தார் என்றும், சிறு வயது முதற்கொண்டே புதிதாக ஏதாவது எழுதுவதில் மிகவும் ஈடுபட்டிருந்தார் என்று கார்ட்னர் கூறுகிறார். இதே போல், ஆசார்யாளின் மொழிசார் அறிவாற்றல் அவருடைய சிறு வயதிலேயே வெளிப்பட்டதைக் காணலாம். மாலை விளையாட்டு முடிந்த பின் தமது நண்பர்களுக்குப் பல நீதிக் கதைகளைக் கூறுவார் என்பதைச் சென்ற இயலில் பார்த்தோம். இங்கே, சிருங்கேரியில் அவருடைய உபநயனம் முடிந்த பின் நடந்த சம்பவம் ஒன்றைக் கூறுவோம். உபநயனம் முடிந்தவுடன் ஆசார்யாளும் அவருடைய பெற்றோரும் ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளைத் தரிசிக்கச் சென்றனர். அப்பொழுது ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளுக்கும் உபநயனம் ஆகியிருந்த ஸ்ரீனிவாஸருக்கும் நடந்த உரையாடலின் ஒரு பகுதியைக் கீழே தருகிறோம்: (இதில் “வடு” என்பது ஆசார்யாளையும் “ஸ்ரீ ஸ்வாமிகள்” என்பது அவரது குருவையும் குறிக்கும்.)

ஸ்ரீ ஸ்வாமிகள்: (வடுவைப் பார்த்து) நீ பள்ளிக்கூடத்தில் வாசிக்கிறாயே, என்ன பாடம் படிக்கிறாய்? சொல்ல முடியுமா?

வடு: நள சரிதம் படிக்கிறேன். மனப்பாடமாகச் சொல்லுவேன்.

ஸ்வாமிகள்: அப்படியானால் சொல்லு பார்க்கலாம்.


வடு: நள சரிதத்தின் சில பாட்டுகளை (கன்னடத்தில்) சொன்னார்.

ஸ்வாமிகள்: இதற்கு அர்த்தம் சொல்லுவாயா?

வடு: சொல்லச் சொன்னால் சொல்லுவேன்.


உடனே ஸ்ரீ ஸ்வாமிகள் தன் கையை வடு ஸ்ரீனிவாஸ சாஸ்திரியின் தலை மேல் வைத்து, 'சொல்லு' என்றார். வடு ஸ்ரீனிவாஸ சாஸ்திரி மிகவும் கம்பீரமாகவும் தெளிவாகவும் பாட்டுக்கு அர்த்தம் சொன்னார். ஸ்ரீ ஸ்வாமிகள் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தார். எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். ஸ்ரீ ராமா சாஸ்திரிகள் என் பையன் தானா இவ்வளவு அர்த்தம் சொல்லுகிறான்' என்று திகைத்து நின்றார் ...

(தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya



Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம்**


An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

**ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.**

## அத்யாயம் 8
## தீவிர பக்தி

இப்படியிருந்து வருகையில் ஒரு நாள் காலையில் திருப்பள்ளியெழுச்சிக்காக வாத்தியக்காரன் வந்து வாசிக்க ஆரம்பித்தான். அதை அந்த சூரன் தடுத்து "யஜமானரும் யஜமானியும் இப்பொழுதுதான் தூங்குவதற்கு போயிருக்கிறார்கள். சப்தம் போடாதே" என்று சொன்னான். இதைக்கேட்காமல் வாத்தியக்காரன் மேலால் வாசிக்கத் தொடங்கியவுடன் அவனிடமிருந்த வாத்தியத்தை சூரன் பலாத்காரமாய் பிடுங்கிக் கொண்டான். அவன் வாத்தியத்தை மறுபடியும் கைப்பற்ற யத்தனித்தபோது அவனையும் அவன் பரிவாரங்களையும் சூரன் வெளியில் தள்ளிவிட்டான்.





உடனே அவன் ஓடிப்போய் ஆலய அதிகாரியிடம் தெரியப்படுத்தினதின்பேரில் அந்த அதிகாரியே நேரில் வந்து சூரனைப் பார்த்து, "இத்தனை நாட்களாக உன் வேலையை ஒழுங்காகப் பார்த்துக்கொண்டிருந்தாயே, இன்றைக்கு ஏன் இவ்விதம் செய்தாய்?" என்று கேட்டார். அதற்கு சூரன் "ஒன்றுமில்லை ஸ்வாமி, யஜமானரும் யஜமானியும் இப்பொழுதுதான் தூங்கப் போயிருக்கிறார்கள். சப்தம் போடாதேயென்று சொன்னேன். இவர்கள் கேட்காமல் வாத்தியம் வாசிக்க ஆரம்பித்தார்கள். பிடுங்கி வைத்தேன், வேறொன்றுமில்லை" என்றான். அதிகாரி "என்னடா சொல்கிறாய்? யஜமானரும் யஜமானியும் இப்பொழுதுதான் தூங்கப் போயிருக்கிறார்கள் என்பதை நீ எப்படித் தெரிந்துகொண்டாய்?" என்று கேட்டதின் பேரில் சூரன் "நான் நேரில் பார்த்தேன், ஸ்வாமி" என்று சொல்லி நடந்தவற்றை விரிவாகக் கூற ஆரம்பித்தான்.

"அர்த்த ராத்திரிக்கு மேல் ஆலயத்திற்குள் ஏதோ வெளிச்சம் தெரிந்தது. நானோ உள்ளே போவதற்கில்லை. இங்கு வாசலில் நின்றுகொண்டே

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பார்த்துக்கொண்டிருந்தேன். அங்கே விளக்கு யாதொன்றுமில்லை. வெளிச்சம் மாத்திரம் தெரிந்தது. கொஞ்சம் கவனித்துப் பார்த்தேன். ஸ்வயம்பிரகாசமான இரண்டு மூர்த்திகள் நல்ல உடை தரித்து ஆபரணங்கள் அணிந்து வருவதைக் கண்டேன். அவர்களே யஜமானரும் யஜமானியும் என்று தீர்மானித்துக் கொண்டேன். அவர்கள் வாசற்பக்கம் வந்தவுடன் தானாகவே கதவுகள் திறந்துகொண்டன. நான் பிரமித்து நிற்கும்போது அவர்கள் வாசற்படி தாண்டி வெளியில் வந்துவிட்டனர். யஜமானர் என்னைக் கூடவே வரும்படி கையால் ஜாடை காட்டினார். நான் உடனே அவர்கள் பின்னாலேயே போனேன். அவர்கள் யமுனா நதிக்கரைக்குச் சென்று மணலில் நடந்துபோனார்கள். கொஞ்ச தூரம் சென்ற பிறகு அங்கு சிறந்த ஆடையாபரணங்கள் தரித்துகொண்டிருந்த ரூபவதிகள் அநேகம்பேர் இவர்களை எதிர்கொண்டழைத்துச் சென்று பலவித உபசாரங்களை மிக மரியாதையாய் விமர்சையாகச் செய்தார்கள். கொஞ்ச நேரம் அவர்களுடன் ஸம்பாஷணம் செய்துகொண்டிருந்துவிட்டு, பிறகு யஜமானரும் யஜமானியும் மத்தியில் நிற்க மற்றவர்களெல்லாரும் இவர்களைச் சூழ்ந்து நின்றுகொண்டு நர்த்தனம் செய்ய ஆரம்பித்தார்கள். இந்த நர்த்தனத்தில் யஜமானரும் யஜமானியும் சேர்ந்துகொண்டார்கள்."

இவ்விதமாக வெகு நாழிகை நர்த்தனம் நடந்ததை நான் ஆச்சர்யத்துடன் ஆனந்தமாய் பார்த்துக் கொண்டிருக்கையில் யஜமானி என்னிடம் வந்து மணலில் நர்த்தனம் செய்யும்போது தன் பாதஸரத்தில் மணல் புகுந்து விடுவதாகக் கூறி அதைக் கழற்றி என்னை வைத்துக்கொண்டிருக்கும்படி என்னிடம் கொடுத்தாள். பிறகு யஜமானரும் என்னிடம் வந்து நர்த்தனம் செய்கையில் தன் சூடாமணி மிகவும் ஆட்டம் கொடுப்பதாகச் சொல்லி அதையும் வைத்துக்கொண்டிருக்கும்படி என்னிடம் கொடுத்தார். பிறகு இருவரும் முன்போலவே நர்த்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். நர்த்தனம் முடிந்தவுடன் மற்றவர்களுக்கு விடை கொடுத்துவிட்டு யஜமானரும் யஜமானியும் யமுனைக் கரையேறித் திரும்பிவிட்டார்கள். நானும் அவர்கள் பின்னாலேயே வந்தேன். அவர்களின் பாதஸரத்தையும் சூடாமணியையும் அவர்கள் கேட்பார்கள் என்று நினைத்திருந்தேன். அவர்கள் ஆலயத்திற்கு வந்தவுடன் என்னைத் திரும்பிப் பார்க்காமலே உள்ளே போய்விட்டார்கள். உடனே அவர்களுடைய உருவங்களும் மறைந்துவிட்டன. வாசற்கதவு தானாகவே தாளிட்டுக் கொண்டது. ஆலயத்திற்குள் இருட்டுதான் தெரிந்தது.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி Our Mail ID : Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா3ஸ்தோத்ரம்

### (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

माला विभात्यम्ब तवाद्य कण्ठे क्वचिच्च रक्ता कचिदच्छवर्णा।
बिम्बाधरस्य प्रभया हि नासामणेश्च कान्त्येति वितर्कयामि ।।७९


மாலா விபா4த்யம்ப3 தவாத்3ய கண்டே2 க்வசிச்ச ரக்தா கசித3ச்ச2வர்ணா |
பி3ம்பா3த4ரஸ்ய ப்ரப4யா ஹி நாஸாமணேஶ்ச காந்த்யேதி விதர்கயாமி ||79




தாயே! உன் கழுத்தில் ஒரு மாலை உள்ளது. உதட்டின் ஒளியால் ஒருபகுதியில் சிவந்ததாக, மூக்கின் ரத்ன அணியால் தூய ஒளியுள்ளதாகத்தெரிகிறது என ஊஹிக்கிறேன்.(79)

अक्षीणो नतचित्तसंस्थिततमोनिर्वापणेऽपि क्षमः चाकेनाप्ययुतस्तवास्यरजनीनाथो गिरां देवते ।
क्षीणेनाङ्कयुजा बहिः स्थितमोमात्रापनोदक्षमे-णाब्जेनायमहो कथं स लभतां साम्यं जगन्मातृके ।।८०

அக்ஷீணோ நதசித்தஸம்'ஸ்தி2ததமோநிர்வாபணே(அ)பி க்ஷம:
சாகேனாப்யயுதஸ்தவாஸ்யரஜனீநாதோ2 கி3ராம்' தே3வதே |
க்ஷீணேனாங்கயுஜா ப3ஹி: ஸ்தி2ததமோமாத்ராபனோத3க்ஷமே-ணாப்3ஜேனாயமஹோ
கத2ம்' ஸ லப4தாம்' ஸாம்யம்' ஜக3ன்மாத்ரு'கே ||80







**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

வாக்கின் தேவதையே! உலகின் தாயே! உன் முகமாகிய சந்திரன் (தேய்பிறையிலும்) தேயாதவன். வணங்குபவரின் உள்ளத்திலுள்ள இருட்டையும் போக்கவல்லவன், களங்கமற்றவன். வானவெளியிலுள்ள சந்திரன் தேய்பவன், களங்கமுள்ளவன். வெளியிலுள்ள இருளை மட்டுமகற்றுபவன், இவனுடன் அந்த சந்திரனை ஒப்பிடுவது அப்படி? (80)

देवानामनिमेषताद्य सफला जाता तवाम्बानिशं वक्त्राब्जस्य निरीक्षणात्सुरपतेस्तद्वत्सहस्राक्षता ।
गौरीशस्य दशाक्षता कमलजस्याष्टाक्षता भारति क्रौञ्चारेर्द्विषडक्षतापि फलयुग्जातेति जानीमहे ।।८१

தே³வாநாமனிமேஷதாத்³ய ஸப²லா ஜாதா தவாம்பா³நிஶம்’ வக்த்ராப்³ஜஸ்ய
நிரீக்ஷணாத்ஸுரபதேஸ்தத்³வத்ஸஹஸ்ராக்ஷதா |
கௌ³ரீஶஸ்ய த³ஶாக்ஷதா கமலஜஸ்யாஷ்டாக்ஷதா பா⁴ரதி
க்ரௌஞ்சாரேர்த்³தி⁴ஷட³க்ஷதாபி ப²லயுக்³ஜாதேதி ஜானீமஹே ||81

தாயே! பாரதி! உன் முகத்தைக்கண்டதால், தேவர்கள் இமை கொட்டாதிருப்பது இன்று பயன்பெற்றது, இந்திரன் ஆயிரம் கண்கள் பெற்றதும், கௌரீமணாளன் பத்து கண்கள் பெற்றதும், பிரும்மா எட்டு கண்கள் பெற்றதும், குரௌஞ்சனின் எதிரியான குகன் பன்னிருகண்கள் பெற்றதும் இன்று பயனடைந்துள்ளன என உணர்கிறோம்.(81)

अस्याब्जस्य समाश्रये मम भवेन्मोदो रजन्यां परं नैवाह्नीत्यत एव चम्पकसुमेनालोच्य नीलोत्पले ।
सेवेते तव वक्त्रपद्ममनिशं नेत्रापदेशान्मुदा रात्रौ वासरमध्यमेऽपि सुखदं वाग्देवि न द्वापरः ।।८२

அஸ்யாப்³ஜஸ்ய ஸமாஶ்ரயே மம ப⁴வேன்மோதோ³ ரஜன்யாம்’ பரம்’ நைவாஹ்னீத்யத
ஏவ சம்பகஸுமேனாலோச்ய நீலோத்பலே |
ஸேவேதே தவ வக்த்ரபத்³மமநிஶம்’ நேத்ராபதே³ஶான்முதா³ ராத்ரௌ
வாஸரமத்⁴யமே(அ)பி ஸுக²த³ம்’ வாக்³தே³வி ந த்³வாபர: ||82

வாக்கின் தேவி! தாமரையை அண்டினால் இரவில் தான் இன்பம் கிட்டும், பகலில் அல்ல எனக் கண்ட இரு நீலோத்பலங்கள், சம்பகப்பூவுடன் கலந்தாலோசித்து, உன் முகத்தாமரைக்கு இரவும் பகலும் கண்கள் என்ற பெயரில் ஸேவை செய்கின்றன. இந்த முகத்தாமரை இரவிலும் நடுப்பகலிலும் இன்பம் தரும். இதில் சந்தேகமில்லை. (82)

(தொடரும் ...)

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஶ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### ஐந்தாவது ஸர்கம்

**மாரீசனையும் சுபாகுவையும் வீழ்த்துதல்; அகல்யை சாப விமோசனம்**

ஶ்ரீமகாதேவர் கூறியது: பின்னர், பசுமையான காட்டினிடையே அமையப் பெற்று, ஏராளமான முனிவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காமாசிரமத்தில் ஓர் இரவு தங்கிவிட்டுப் பொழுது விடிந்ததும் மெல்லப் புறப்பட்டார்கள். அம்மூவரும், ஸித்தர்களும் சாரணர்களும் வசிக்கும் ஸித்தாசிரமத்தை அடைந்தார்கள். அங்கிருந்த முனிவர்கள், விசுவாமித்திரரின் ஆணைப்படி, ராம-லட்சுமணர்களை மிகவும் உயர்ந்த முறையில் போற்றி உபசரித்தார்கள்.



ராமன், கௌசிகரைப் பார்த்து, 'பெரியோரே! அந்த அரக்கப் புல்லர்கள் எங்கு உள்ளனர் என்பதை மட்டும் காட்டுங்கள். முனிவரே! அதன்பின் உடனே நீங்கள் ஹோமதீக்ஷை ஏற்கலாம்' என்றார். சரி என்று சொல்லிவிட்டு. மற்ற முனிவர்களுடன் சேர்ந்து விசுவாமித்திரர் வேள்வியைத் துவக்கினார்.

மத்யான்ன வேளையில், தம் இஷ்டப்படி உருவம் எடுக்கக் கூடிய மாரீசன்-சுபாகு என்ற அவ்விரு அரக்கர்களும், இரத்தத்தையும் எலும்புகளையும் (வேள்விச் சாலையில்) பொழிந்து கொண்டு தோன்றினார்கள். புத்திமானான ராமன், வில்லை எடுத்து, இரு பாணங்களைப் பூட்டி. (நாண் கயிற்றைச்) செவி வரையில் இழுத்து, அவர்களை நோக்கித் தனித்தனியே செலுத்தினார். அவற்றில் ஒன்று, மாரீசனைப் புரட்டிச் சென்று நூறு யோஜனை தொலைவுக்கு அப்பால் கடலில் வீழ்த்தியது. ஆகா! இது மகா அற்புதம் அல்லவா!

இரண்டாவது பாணம். அக்னியைக் கக்கிக் கொண்டு வந்து சுபாகுவைச் சாம்பலாக்கி விட்டது. தேவர்கள், ராம-லட்சுமணர் மீது மலர்மாரி

பொழிந்தார்கள்; துந்துபி வாத்தியம் முழங்கினார்கள்; ஸித்த-சாரணர்கள் புகழ் பாடினார்கள். போற்றுதலுக்குரிய ரகுநந்தனனை விசுவாமித்திரர் மிகவும் பாராட்டித் தன் மடியில் வைத்துக் கொண்டு, பக்திபரவசத்தினால் கண்களில் நீர்மல்க, மார்புறத் தழுவிக் கொண்டார்.ராமனுக்கும். அவர் சகோதரனுக்கும் கனிந்த பழங்களைக் கொடுத்து உண்ணச் செய்தார்; புராணங்களிலிருந்து இனிய கருத்துக்களை எடுத்துக் கூறினார். மூன்று நாட்களை அவ்விடத்தில் கழித்தார். (தொடரும்...)

Our Website link : https://www.voiceofjagadguru.com/
Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |